# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700

ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823

වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: NPD/DCB2022
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2021-12-31

சுற்று நிருப இலக்கம்:- **MF/NPD 03/2021**

அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும்,

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2022

அதிமேதகு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" என்ற கொள்கை அறிக்கையிற்கு அமைவாக கிராமிய அபிவிருத்தியினூடாக பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டுள்ளதுடன் மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலமும் பொருளாதார இலக்குகளை அடைவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்நோக்கை யதார்த்தமாக்குகின்ற நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட 2022-2024 ஆண்டுகளிற்கான மத்திய கால வரவு செலவுத் திட்டக் கட்டமைப்பிற்குள் 2022 ஆம் ஆண்டிற்காக நிதி ஒதுக்கீட்டின் போது அபிவிருத்தியின் பலன்களை விரைவாக மக்களிற்குக் கிடைக்கச் செய்வதற்காக பிராந்திய அபிவிருத்தியில் முக்கியத்துவமளிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மேலும், கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக கிராமிய பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள பாதகமான விளைவுகளைத் குறைப்பது மற்றும் கடந்த வருடங்களில் காலநிலை உட்பட இயற்கை அனர்த்தங்களின் காரணமாக சேதங்களிற்கு உட்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைப்பதும் முன்னுரிமையான தேவையாகும்.

கிராமிய அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்துவதினூடாக, இதுவரை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவரிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா. 10 மில்லியன் ஒதுக்கீட்டுப் பெறுமானம் ரூபா. 5 மில்லியனால் அதிகரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் ரூபா 15 மில்லியன் ஆக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களை இனங்காண்பதில், 2022 வரவு செலவுத் திட்ட முன்மொழிவினூடாக, பிராந்திய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உங்கள் மாவட்டத்திலுள்ள நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களைக் கருத்திற் கொண்டு, அத்திட்டங்கள் பிரதி செய்யப்படாத வகையில் கருத்திட்டங்களைக் இனங்கண்டு செயற்படுத்தல் வேண்டும்.

2022 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான குறித்த ஆலோசனைகள் பின்வருமாறு வெளியிடப்படுகின்றன. 2022 தை 31ம் திகதியிற்கு முன்பதாக, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினூடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள முன்மொழிவுகள் உங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

கருத்திட்டங்களைத் தெரிவு செய்தல் மற்றும் நிதி ஒதுக்கீடு

1. கருத்திட்டங்களைத் தெரிவு செய்தல்

1.1 கிராமிய குடிநீர் விநியோகத் திட்டங்கள்.

1.2 சிறிய அளவிலான கிராமிய மின் உற்பத்தித் திட்டங்கள் / சிறிய அளவிலான மின் விரிவாக்கங்கள் (இந்த திட்டங்களை 2022 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டு பூரணப்படுத்த முடியுமென இலங்கை மின்சார சபை உறுதி செய்தல் வேண்டும்.)

1.3 மாகாண சபைகளுக்குரிய வீதிகள், கிராமிய வீதிகள், நடை பாதைகள்/ படிக்கட்டுகள், பாலங்கள், மதகுகள், கடவைகள், கம்பிப் பாலங்கள் (cable bridges), வீதியின் இரு பக்கங்களிலும் வடிகாற் தொகுதிகள் போன்ற கிராமிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் விருத்தி செய்வதற்கான கருத்திட்டங்கள்.

1.4 உற்பத்திற்கு அதிக பெறுமதியை / அதிக விலையை வழங்குகின்ற பொருளாதார நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்காக உதவுகின்ற கடைகள் /வாராந்த சந்தைகள் / விற்பனை நிலையங்களின் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் / நவீனமயமாக்கல் மற்றும் அவற்றிற்கு ஏற்ற கழிவகற்றல் வசதிகளை உருவாக்குதல் / விருத்தி செய்தல்.

1.5 ஆரம்ப மற்றும் கனிஷ்ட பாடசாலைகளின் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் அல்லது விருத்தி செய்தல் / உபகரணங்கள் வழங்குதல், அவற்றிற்கான அணுகலை மேம்படுத்தல்.

1.6 பிராந்திய மருத்துவமனைகள், கிராமிய மருந்தகங்கள் (dispensary), சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள், அரச ஆயுர்வேத மருத்துவமனைகள், மகப்பேறு மற்றும் சிறுவர் மருத்துவமனைகள் ஆகியவற்றில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் அல்லது விருத்தி செய்தல் / உபகரணங்களை வழங்குதல், அவற்றிற்கான அணுகலை மேம்படுத்தல்.

1.7 கிராமிய விளையாட்டு மைதானங்கள் மற்றும் நூலகங்களிற்காக வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டம்.

1.8 சிறு நீர்ப்பாசனங்களின் கீழ் சிறிய குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுக்கள், நீரைத்தேக்கும் குட்டைகள், விவசாயக் கிணறுகள், குழாயக் கிணறுகள், என்பவற்றை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்.

1.9 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் / சமூகம் சார்ந்த அமைப்புக்கள், சமூக மண்டபங்கள், முன்பள்ளிகள், அநாதை இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கான உபகரணங்களை வழங்குதல்.

1.10 பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகள், மத மற்றும் கலாசார நிலையங்களுக்கு வசதிகளை ஏற்படுத்தல், உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மயானங்களைப் புனரமைத்தல்.

1.11 பல்வேறு வேலைத்திட்டங்களின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பகுதியளவு பூர்த்திசெய்யப்பட்டு நீண்டகாலமாக கைவிடப்பட்ட பொருளாதார ரீதியாக சமூகத்திற்கு பலன்கள் கிடைக்கும், 2022 இற்குள் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு பாவனைக்குட்படுத்த முடியுமான சிறியளவிலான கட்டடங்களைப் பூர்த்தி செய்தல்.

1.12 வுன விலங்குகளிடமிருந்து மனித குடியிருப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை நீக்குவதற்கான அல்லது குறைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்தல்.

1.13 கழிவகற்றல் வசதிகளற்ற வீடுகளுக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்துதல், வீடுகளுக்கு மின்சார வசதிகளை வழங்குதல், வீடுகளுக்கு மின் இணைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் குடிநீர் இணைப்புக்கள் வழங்குதல்.

2. **பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நிதி ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்படும் விதம்**

2.1 ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கான மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 50% இனை **(7.5 மில்லியன் ரூபா)** பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் திட்டங்களுக்காக (நிர்மாண நடவடிக்கைகளிற்காக) ஒதுக்குதல் வேண்டும்.

2.2 ஒரு கருத்திட்டத்தின் உச்சப் பெறுமதி 5 மில்லியன் ரூபாவுக்கு வரையறுக்கப்படல் வேண்டும்.

2.3 ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் **20%** **(3.0 மில்லியன் ரூபா)** உச்சளவுக்கு கீழ் மதிப்பீட்டுப் பெறுமதி **ரூபா 200,000/-** இலும் குறைவான கட்டுமானக் கருத்திட்டங்களை செயற்படுத்த முடியும்.

2.4 மக்கள் தொகை, வறுமை மற்றும் நிலப்பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பிரதேச செயலக பிரிவுகளில் நியாயமான முறையில் நிதி விநியோகிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

2.5 இவ்வொதுக்கங்களின் கீழ் பொது நோக்கங்களுக்காக மாத்திரமே கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் மேலே மற்றும் பிரிவு 1.13 இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களைத் தவிர தனிநபர்கள் அல்லது தனிப்பட்ட நடவடிக்கைகளிற்காக நேரடி மானியங்கள் வழங்கப்படக்கூடாது.

2.6 மேலே 1.13 இன் கீழ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பயனாளிகளின் தகைமைகளைப் பரிசீலித்தல் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

**பயனாளிகளின் தகைமைகள்**

I. பயனாளிகளின் தெரிவின் போது பிராந்தியத்தில் குறைந்த வருமானம், வறுமையில் வாடும், சுய முயற்சியால் குறித்த வசதிகளை ஏற்படுத்த முடியாமல் காணப்படுகின்ற குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

II. அங்கவீனர்கள், விசேட தேவையுள்ள குழந்தைகள் / முதியோர்கள் உள்ள குடும்பங்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

**நிதியொதுக்கீட்டெல்லை**

| அபிவிருத்திப் பிரிவு | பயனாளி ஒருவரிற்கான அதிகபட்ச ஒதுக்கீடு |
|---|---|
| கழிவறை வசதிகளை ஏற்படுத்தல் - வீடு | ரூபா. 50,000.00 |
| வீட்டு மின்னிணைப்பு | ரூபா. 25,000.00 |
| குடிநீர் இணைப்புகளை வழங்குதல் | ரூபா. 20,000.00 |

III. தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் தகைமைகள் மற்றும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய பரிந்துரைகள் உரிய கள உத்தியோகத்தர் / உத்தியோகத்தர்களினூடாக களஆய்வு மேற்கொண்டு இணைப்பு 01ன் பிரகாரம் பிரதேச செயலாளரினால் பெறப்படல் வேண்டும்.

IV. நகர மற்றும் தோட்டங்களை அண்மித்த சமூக குடியிருப்புக்கள் மீது பொது மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஒரு பொது மலசல கூட அலகிற்கு ரூபா. 500,000.00 ஆக நிதி ஒதுக்கப்படலாம்.

3. கருத்திட்ட அனுமதி வழங்கும் செயன்முறை

3.1 அனைத்து கருத்திட்ட முன்மொழிவுகளும் உங்களுக்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் 2 வாரங்களுக்குள் குறித்த பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, குறித்த கருத்திட்ட முன்மொழிவுகள் 2022 ஆம் ஆண்டிற்குள் அமுல்படுத்தி பூரணப்படுத்த முடியும் என்ற பரிந்துரையைப் பெற வேண்டும்.

3.2 நிர்மாணப் பணிகளுக்கு இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பிரதேச செயலாளரிடமிருந்து சாத்தியக்கூறு அறிக்கை பெறப்படல் வேண்டும்.

3.3 நிர்மாணம் மற்றும் புனரமைப்புக்களிற்கான நிதியை ஒதுக்குவதற்கு முன்பதாக, அந்நிர்மாணம் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காக எதிர்காலத்தில் தடைகள் இன்றி பயன்படுத்த முடியும் எனவும் பராமரிப்பு நடவடிக்கைகளிற்கு முறையான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் மாவட்டச் செயலாளர் / பிரதேச செயலாளரினூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3.4 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற அமுல்படுத்தமுடியுமான அனைத்து கருத்திட்ட முன்மொழிவுகளும் பிரதேச செயலாளர்களினால் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காக முன்வைக்கப்படல் வேண்டும்

3.5 2022 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் உங்களது மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களால் இச் சுற்றறிக்கையின் வழிகாட்டுதலின் பிரகாரம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற கருத்திட்ட முன்மொழிவுகள் 2022 மாசி மாதம் 28 ஆம் திகதிக்குள் உங்களால் அனுமதி வழங்கப்பட்டு, அமுல்படுத்துவதற்காக குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3.6 2022 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழுள்ள ஒதுக்கீடுகள் மாவட்டச் செயலாளர் செலவினத் தலைப்பின் கீழ் தனி விடயங்களாக மதிப்பீடுகளில் காட்டப்பட்டுள்ளன.

3.7 யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களூடாக ஒதுக்கப்பட்டுள்ளன.

3.8 மேலே 3.7 இல் நிர்வாக மாவட்டங்கள் மற்றும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் தொடர்பான விசாரணைகள் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தில் விசாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3.9 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டங்களை மதிப்பீடு செய்து அனுமதி வழங்கல், முன்னேற்றத்தை கண்காணித்தல் மற்றும் பின்தொடர்வதற்காக உங்களது மேற்பார்வையின் கீழ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் தலைமையில் பொருத்தமான வழிமுறையொன்றை உருவாக்கல் வேண்டும்.

3.10 அனைத்து கருத்திட்டங்களும் அரசு அங்கீகரிக்கப்பட்ட விதிகள், பெறுகை வழிகாட்டல்கள் மற்றும் நிதிப் பிரமாணங்களிற்கு அமைவாகச் செயற்படுத்தப்படல் வேண்டும்.

3.11 2022 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து கருத்திட்ட முன்மொழிவுகளும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தகவலிற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3.12 இவ்வேலைத் திட்டத்தின் கீழ், 2022 ஆம் ஆண்டிற்குள் செயற்படுத்தப்பட்டு நிறைவு படுத்த முடியுமான கருத்திட்டங்கள் மாத்திரமே இனங்காணப்படல் வேண்டும். அனைத்து கருத்திட்டங்களும் 2022 இற்குள் நிறைவு செய்யப்பட்டு, அனைத்து கொடுப்பனவுகளும் பூர்த்தி செய்யப்படுவதை மாவட்ட செயலாளர்கள் உறுதி செய்தல் வேண்டும். 2022 ஆம் ஆண்டு முதல் கருத்திட்டங்களை குறைத்து மதிப்பிடக்கூடாது

4. நிர்வாகச் செலவுகள்

4.1 இவ்வேலைத்திட்டத்தினூடாக செயற்படுத்தப்படுகின்ற நிர்மாண மற்றும் நிர்மாணமற்ற அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களின் மொத்த கருத்திட்டப் பெறுமதியில் உண்மையாக செலவு செய்த பணத்தில் 3% பெறுமதியை நிர்வாக செலவுகளிற்கு ஒதுக்கப்படல் வேண்டும். அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான மதிப்பீடுகளை தயாரிப்பதில் உரிய நிர்வாகச் செலவுகள் உள்ளடக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நிர்வாகச் செலவு ஒதுக்கங்கள் பின்வருமாறு ஒதுக்கப்படல் வேண்டும்.

மாவட்ட செயலகத்திற்கு 1%

பிரதேச செயலகத்திற்கு 2%

4.2 பிரதேச செயலகம் கருத்திட்டங்களை நேரடியாக செயற்படுத்தாமல், வேறு அரச நிறுவனமொன்றினூடாக (உ.ம் . உள்ளூராட்சி நிறுவனங்கள், கமநல சேவைகள் திணைக்களம்) கருத்திட்டத்தை செயற்படுத்தும் பொழுது பிரதேச செயலகத்தின் மீது ஒதுக்கப்படுகின்ற 2% நிர்வாகச் செலவானது பின்வருமாறு ஒதுக்கப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| பிரதேச செயலகத்திற்கு | 1% |
| திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனத்திற்கு | 1% |

4.3 ஒதுக்கப்பட்ட நிர்வாகச் செலவுகள், குறித்த கூட்டங்கள் ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தக் கருத்திட்ட அமுலாக்கப் பணிகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான பணிகளைச் செய்யும் மாவட்ட அளவிலான உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மட்ட உத்தியோகத்தர்களிற்கான பயணச் செலவுகள், இணைந்த கொடுப்பனவுகள், மேலதிக நேர மற்றும் விடுமுறை ஊதியம் உட்பட தேவையான எழுதுவினைப் பொருட்கள் என்பவற்றிக்குப் பயன்படுத்தலாம்.

**முன்னேற்ற கண்காணிப்பு, கணக்காய்வு மற்றும் ஏனைய விடயங்கள்**

5. முன்னேற்ற மேற்பார்வை

5.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் **கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினூடாக** மேற்பார்வை செய்யப்படுகின்றதுடன் அது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் எதிர்காலத்தில் அத்திணைக்களத்தால் வெளியிடப்படும்.

5.2 கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினூடாக, இந்த வேலைத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்களின் **பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பான அறிக்கை மாதாந்தம் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு** சமர்ப்பிக்கப்படுகிறது.

6. **கணக்காய்வு**

6.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதிகளின் கீழ் கருத்திட்ட அமுலாக்க முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்பாட்டிலுள்ள கருத்திட்டங்களின் தரத்தை உறுதி செய்வதற்காக, முழு வேலைத்திட்டமும் முறையாக கணக்காய்வு செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு ஒரு விதிமுறை உருவாக்கப்படல் வேண்டும்.

7. **ஏனைய விடயங்கள்**

7.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2022 இன் அமுலாக்கத்திற்கான அடிப்படை படிகளிற்குரிய கால அளவு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 03).

7.2 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2022 இனூடாக செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் சார்பாக செலுத்த வேண்டிய அனைத்து வரிகள் மற்றும் பிற

கொடுப்பனவுகள் இவ்வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நிதியினூடாக உள்ளடக்கப்பட வேண்டியதுடன் மேலதிக நிதி வழங்கப்பட மாட்டாது.

7.3 கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படுகின்ற முன்மொழிவுகள் இணைப்பு 04 படிவத்தினூடாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.

7.4 அனுமதி பெறப்பட்ட மாவட்டத்தில் மொத்த கருத்திட்ட முன்மொழிவுகள் அத்தகைய கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான கால அளவு மற்றும் (2022 ஆம் ஆண்டில் அனைத்து வேலைத் திட்டங்களிற்கான ஒதுக்கீடுகளும் காலாண்டு அடிப்படையில் ஒதுக்கப்படுவதால்) கருத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளிற்குரிய காலம் சரியான முறையில் தீர்மானிக்கப்பட்டு காலாண்டுகளிற்கு அமைவாக நிதித் தேவை 2022 பங்குனி 1ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு 5 இற்கு அமைவாக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கான பிரதியொன்றுடன் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

7.5 உங்கள் மாவட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் சுருக்கம் இணைப்பு 6 இனூடாக 2022 பங்குனி 01 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

7.6 மொத்த வேலைத் திட்டங்களையும் செயற்படுத்தும் போது இந்த சுற்று நிருபத்திலுள்ள உள்ள வழிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதனை உங்களால் உறுதி செய்யப்படல் வேண்டும்.

இவ்வாறே இச்சுற்றறிக்கையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் உங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் விரைவாக அறிவித்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஒப்பம் / எஸ். ஆர் ஆட்டிகல
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்:

1. அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் - தகவலுக்காக மற்றும் இனங்காணப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவுகளை உரிய மாவட்ட செயலாளர்/ மாவட்ட செயலாளர்களுக்கு **2021 தை மாதம் 31** ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்காக
2. செயலாளர் - உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
3. அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
4. கணக்காய்வாளர் நாயகம் – கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
5. பணிப்பாளர் நாயகம் - தேசிய திட்டமிடல் திணைக்களம்
6. பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
7. பணிப்பாளர் நாயகம் - கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்
8. பணிப்பாளர் நாயகம் - திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம்
9. அனைத்து மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்கள்
10. அனைத்து மாவட்டப் பிரதான கணக்காளர்கள்

**இணைப்பு 01**

## பயனாளியின் தகுதி அறிக்கை - 2022

1. பிரதேச செயலாளர் பிரிவு :…………………………………………………….
2. கிராம சேவையாளர் (GN) பிரிவும் இலக்கமும்:…………………………………………....
3. பயனாளியின் பெயர்/சமூகக் குடியிருப்பின் பெயர்:………………………………………...
4. பயனாளியின் முகவரி / சமூகக் குடியிருப்பின் முகவரி:…………………………………...
5. முன்மொழியப்பட்ட திட்டத்தின் பெயர் :…………………………………………………….
6. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) :…………………….
7. கருத்திட்டத்தின் தன்மை, பின்வரும் பொருத்தமான கூட்டிற்குள் (√) அடையாளமிடவும் :
   - I. முழுமையான புதிய நிர்மாணம் ☐
   - II. ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டமொன்றின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல் ☐
   - III. மின்சார வசதிகளை ஏற்படுத்தல் ☐
   - IV. வீடு மற்றும் குடிநீர் இணைப்புக்களை வழங்குதல் ☐
8. மேற்குறித்த இலக்கம் 5 இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட கருத் திட்டங்கள் தொடர்பாக பின்வரும் தகவல்களைத் தருக:
   - 8.1 பயனாளி இப்பிரதேசத்தில் நிரந்தர வதிவாளாரா? ஆம் / இல்லை
   - 8.2 பயனாளி வழங்கப்பட்ட முகவரியில் உள்ள காணியின் உரிமையாளரா? ஆம் / இல்லை
   - 8.3 பயனாளி பெற்றோருக்கு உரித்தான காணியில் வசிப்பவரா? ஆம்/ இல்லை
   - 8.4 பயனாளி வழங்கப்பட்ட முகவரியில் நிரந்தர வதிவாளரா? ஆம்/ இல்லை
   - 8.5 பயனாளி இப்பிரதேசத்தில் குறைந்த வருமானம் உடையவரா? ஆம்/ இல்லை
   - 8.6 பயனாளியின் குடும்ப உறுப்பினர்கள் யாராவது அங்கவீனரானவர்களா? ஆம்/ இல்லை
   - 8.7 பயனாளியின் குடும்ப உறுப்பினர்களில் விசேட தேவை கொண்ட குழந்தைகள் உள்ளனரா? ஆம்/ இல்லை
   - 8.8 பயனாளி வயதான நபரா? ஆம்/ இல்லை
   - 8.9 கருத்திட்டம் சமூக குடியேற்றத்திற்குரிய அபிவிருத்தியொன்றா? ஆம்/ இல்லை
   - 8.10 முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தில் உள்ள பயனாளிகளின் எண்ணிக்கை - ☐

     வீடுகளிற்கான மலசலகூடம் / குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்கான கருத்திட்டங்களுடன் மாத்திரம் தொடர்பானது
   - 8.11 பயனாளியின் வீட்டில் தற்போது நிரந்தர மலசலகூடம் / நிரந்தர குடிநீர் வசதிகள் உள்ளனவா? ஆம்/ இல்லை
   - 8.12 இல்லையெனில் தற்பொழுது கழிவகற்றல் / குடி நீர் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் முறை

     ………………………………………………………………………………………………

     ………………………………………………………………………………
9. 2022 இற்கான நிதி முதலீடுகள் தொடர்பான விபரங்கள்
   - 9.1 இப்பயனாளி மீது முன்மொழியப்பட்ட விடயங்களிற்காக இவ்வருடத்தில் வேறு ஒரு மூலத்தினால் நிதி ஒதுக்கப்பட்டு அல்லது ஒதுக்கப்பட உள்ளதா? ஆம்/ இல்லை
   - 9.2 மேலே 9.1 இற்கு ஆம் எனில், பின்வரும் விபரங்களைத் தருக

| நிதி மூலங்கள் | அமைச்சு/ நிறுவனம் | உள்ளடக்கப்படுகின்ற வேலைப் பகுதி | தொகை (ரூபா.) | இதனால் கருத்திட்டத்தைப் பூரணப்படுத்த முடியுமா? |
|---|---|---|---|---|
| 1 | | | | ஆம்/ இல்லை |
| 2 | | | | ஆம்/ இல்லை |

9.3 முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை பூரணமாக நிறைவேற்ற முன்மொழியப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு போதியது / போதியதன்று

9.4 இம்முதலீட்டினால் கருத்திட்டம்

I. முழுமையாக நிறைவடையும்/ பகுதியளவு நிறைவடையும்/ மேலும் இக்கருத்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு ரூ.......................... ஒதுக்கீட்டை (அண்ணளவாக) ஈடுபடுத்தல் வேண்டும்

9.5 அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்ட வசதிகள் தற்போது சிறந்த நிலையில் பேணப்படுகிறதா? ஆம் / இல்லை

அதன் பிரகாரம், முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு ஒதுக்கப்படல் அவசியமன்று/ அவசியம்

9.6 பயனாளியால் உழைப்பு மற்றும் பொருள் உதவி வழங்கப்படுமெனின் அதன் அண்ணளவான மதிப்பீடு.........................................

10. 2022 ஆம் ஆண்டினுள் இக்கருத்திட்டத்தை நிறைவு செய்ய முடியுமா? சாத்தியம்/ சாத்தியமற்றது

10.1 ஆம் எனின் அதற்காக செலவிடப்படும் காலம் :- .............இலிருந்து ...............வரை மாதங்கள் / வாரங்கள்

11. இக்கருத்திட்டம் தொடர்பாக கிராம உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்/ அபிவிருத்தி உதவியாளரின் பரிந்துரை.

| களஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது/ மேற்கொள்ளப்படவில்லை | கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது/ மேற்கொள்ளப்படவில்லை |
|---|---|
| மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் முன்மொழியப்பட்ட வசதிகளை வழங்குதல் பொருத்தமானது எனவும் பரிந்துரைக்கிறேன்/ பரிந்துரைக்கவில்லை. | மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் முன்மொழியப்பட்ட வசதிகளை வழங்குதல் பொருத்தமானது எனவும் பரிந்துரைக்கிறேன்/ பரிந்துரைக்கவில்லை. |
| .......................................... <br>கிராம உத்தியோகத்தர்<br>கிராம உத்தியோகத்தர் பிரிவு (பெயர் மற்றும் இலக்கம்)<br>திகதி:- | ...................................... <br>அபிவிருத்தி உத்தியோகத்தர் / அபிவிருத்தி உதவியாளர்<br>கிராம உத்தியோகத்தர் பிரிவு (பெயர் மற்றும் இலக்கம்)<br>திகதி:- |

மேற்கூறிய தகவல்களைக் கருத்தில் கொண்டு, முன்மொழியப்பட்ட வசதிகள் 2022 ஆம் ஆண்டில் வழங்குதலானது பொருத்தமானது / பொருத்தமற்றது என பரிந்துரைக்கிறேன்.

...................................

பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) திகதி:-

(முத்திரை)

மேற்கூறிய தகவல்களைக் கருத்தில் கொண்டு, முன்மொழியப்பட்ட வசதிகள் 2022 ஆம் ஆண்டில் வழங்குதலானது பொருத்தமானது / பொருத்தமற்றது என பரிந்துரைக்கிறேன்.

.........................

பிரதேச செயலாளர் திகதி:-

(பதவி முத்திரை)

**இணைப்பு 02**

**முன்மொழியப்பட்ட நிர்மாணத்துறைக் கருத்திட்டங்கள் தொடர்பான அடிப்படைச் சாத்தியவள ஆய்வறிக்கை 2022**

1. பிரதேச செயலாளர் பிரிவு :
2. கிராம சேவையாளர் (GN) பிரிவு, எண்:
3. முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தின் பெயர் :
4. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி (ரூபா):
5. கருத்திட்டத்தின் தன்மை, பின்வரும் பொருத்தமான கூட்டிற்குள் (√) அடையாளமிடவும் :

| | |
|---|---|
| I. முழுமையாக புதிய நிர்மாணம் | |
| II. புதிய நிர்மாணம் (ஒரு பகுதியாக/ ஒரு கட்டமாக) | |
| III. ஏற்கனவேயுள்ள கருத்திட்டமொன்றின் ஒரு பகுதி | |
| IV. ஏற்கனவேயுள்ள கருத்திட்டமொன்றின் மீள்நிர்மாணம்/ புனர்நிர்மாணம் | |

6. மேற்குறித்த இல.5 பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக கீழே உள்ள தகவல்களைக் குறிப்பிடுக

6.1 கருத்திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட காணி அரசாங்கத்திற்குரியதா? ஆம்/ இல்லை

இல்லையெனில் அரசாங்கத்திற்கு உரிமை மாற்றம் செய்வதற்குத் தெளிவானதா? ஆம்/ இல்லை

காணி தெளிவானது எனின், அதற்காக குறித்த காணியின் உரிமையாளரால் எழுத்து மூலமான இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது/ இணக்கப்பாட்டை வழங்குவதற்கான விருப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது ஆம்/ இல்லை

6.2 குறித்த நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசேடமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனின், அது தொடர்பாக குறிப்பிடவும்

| இல. | நிறுவனம் | இணக்கப்பாடு பெறப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்பது | குறித்த நிறுவனத்திடம் இருந்து இணக்கப்பாடு கிடைக்கப் பெறுமா? |
|---|---|---|---|
| 1 | மத்திய சுற்றாடல் அதிகார சபை | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |
| 2 | புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |
| 3 | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |
| 4 | வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |
| 5 | உள்ளூராட்சி நிறுவனம் (குறிப்பிடவும்) | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |
| 6 | நீர்ப்பாசனத் திணைக்களம் | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |
| 7 | இலங்கை மின்சார சபை | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |
| 8 | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |
| 9 | வேறு (குறிப்பிடவும்) | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை |

7. முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் விவரங்கள்

7.1 கடந்த 03 வருடங்களில் இக்கருத்திட்டத்தின் முன்மொழியப்பட்ட பணிகளுக்காக ஏதாவது நிறுவனமும் பணத்தை முதலீடு செய்திருக்கிறதா? ஆம்/இல்லை

ஆம் எனின், கீழே உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தவும்

| ஆண்டு | பணம் (ரூ) | முதலீடு செய்த நிறுவனம் | விசேட காரணிகள் (இருப்பின்) |
|---|---|---|---|
| 2021 | | | |
| 2020 | | | |
| 2019 | | | |

7.2 அவ்வாறெனின், கருத்திட்ட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா? ஆம்/ இல்லை

8. 2022 நிதி முதலீட்டு விபரங்கள்

8.1 இக்கருத்திட்டத்திற்காக இவ்வருடம் வேறொரு நிதி மூலத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டோ அல்லது ஒதுக்கீட்டிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?
ஆம்/இல்லை

8.2 மேலே உள்ள 8.1 இன் கீழ் ஆம் எனில் பின்வரும் தகவல்களை வழங்கவும்.

| நிதி மூலம் | அமைச்சு/நிறுவனம் | பூரணப்படுத்தப்பட்டுள்ள வேலைத் தொகுதி | தொகை (ரூபா.) | இதனூடாக கருத்திட்டத்தை பூரணப்படுத்த முடியுமா? |
|---|---|---|---|---|
| 1. | | | | ஆம் / இல்லை |
| 2. | | | | ஆம் / இல்லை |

8.3 முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட நிதி ஒதுக்கீடு போதுமானது/ போதுமானதாக இல்லை.

8.4 இம்முதலீடுகளினூடான கருத்திட்டம்

I. பூரணப்படுத்தப்பட்டுள்ளது/ பகுதியளவு பூரணப்படுத்தப்பட்டுள்ளது/ மேலும் இக்கருத்திட்டத்தைப் பூரணப்படுத்துவதற்கு ரூ. ................ நிதி (அண்ணளவாக) ஈடுபடுத்தல் வேண்டும்.

8.5 அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்ட இக்கருத்திட்டம் தற்போது சிறந்த நிலையில் உள்ளதா? ஆம்/ இல்லை

அதன் பிரகாரம், முன்மொழியப்பட்ட நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படக் கூடாது/ மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9. முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்படும் வெளியீடு/ பயனாளிகளின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள்

I. வீதிக் கருத்திட்டங்களின் பெயர்கள் புதிய அபிவிருத்திகளை மேற்கொள்ளும்/ புதிதாக நிர்மாணிக்கப்படும் தூரம் (மீட்டர்/ கிலோ மீட்டர்)…………………….
II. விவசாயம்/ நீர்ப்பாசனக் கருத்திட்டமாக இருப்பின் தூரம் (மீ/கி.மீ) ………… புதிதாக பயிரிடப்படும் பரப்பு (ஏக்கர்) …………….
III. வேறு………………………………………………………………………………………… …………….
IV. பயனாளிகளின் எண்ணிக்கை - குடும்பங்கள்: ………….தனிநபர்கள் - (பெண்கள்):………….. (ஆண்கள்): ……………….

10. கருத்திட்டத்தினூடாக கிராமிய சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற முக்கிய பயன்களைக் குறிப்பிடுக
i.
ii.
iii.

11. பிரதேச கிராமிய சமூகத்தின் தேவைக்கேற்ப இக்கருத்திட்டம் அத்தியாவசியமானது/ அவசியமானது/ முன்னுரிமை அளிக்கப்படாதது/ அவசியமற்றது

12. 2022 வருடத்திற்குள் இக்கருத்திட்டத்தை பூரணப்படுத்த முடியுமா? முடியும்/ முடியாது

13. ஆம் எனில், அதற்கு செலவாகும் காலம்: - ............. இருந்து................... வரை மாதம்/ கிழமை................................

14. கருத்திட்டத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள்

    14.1 பூர்த்தியடைந்ததும் பராமரிப்பை கையேற்கும் நிறுவனம்.. ...................................................

    14.2 பூர்த்தியானதன் பின்னர் பராமரிப்புக்கான வேலைத்திட்டம் ஒன்று உண்டா? விபரங்களை வழங்கவும் - ....................................... ............................................................ ...................... ....................................... ..........................................................................................................

15. இக்கருத்திட்டம் தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது/ மேற்கொள்ளப்படவில்லை.

மேற்கூறிய தகவல்கள் உண்மை என உறுதியளிக்கிறேன்

...................................................................
அபிவிருத்தி உத்தியோகத்தர்/ அபிவிருத்தி உதவியாளர் திகதி:-
கிராம அலுவலர் பிரிவு (பெயர் மற்றும் எண்)

மேற்கண்ட தகவல்களைக் கருத்திற் கொண்டு, மேலே கருத்திட்டத்தை 2022 ஆம் ஆண்டில் செயற்படுத்துவது பொருத்தமானது/ பொருத்தமற்றது என பரிந்துரைக்கிறேன்.

...................................
உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) திகதி:-
(முத்திரை)

மேற்கண்ட தகவல்களைக் கருத்திற் கொண்டு, மேலே கருத்திட்டத்தை 2022 ஆம் ஆண்டில் செயற்படுத்துவது பொருத்தமானது/ பொருத்தமற்றது என பரிந்துரைக்கிறேன்.

.........................
பிரதேச செயலாளர் திகதி:-

(பதவி முத்திரை)

**இணைப்பு 03**

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2022 – செயற்றிட்டம்**

| தொடரிலக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | இலக்கு | பொறுப்பு |
|---|---|---|---|
| 01 | கௌரவ பாரளுமன்ற உறுப்பினர்களின் கருத்திட்ட முன் மொழிவுகளை மாவட்ட செயலாளருக்கு சமர்ப்பித்தல் | **2022 தை மாதம் 31** ஆம் திகதிக்கு முன்னர் | கௌரவ பாரளுமன்ற உறுப்பினரகள் |
| 02 | குறித்த கருத்திட்ட முன்மொழிவுகள் 2022 ஆண்டினுள் செயற்படுத்தி பூர்த்தி செய்யலாம் என உறுதிப்படுத்தல் | கௌரவ பாரளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கருத்திட்ட முன்மொழிவுகள் மாவட்டச் செயலாளருக்குக் கிடைக்கப்பெற்று 2 வாரங்களிற்குள் | மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர், பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 03 | பிரதேச அபிவிருத்திக் குழுவில் ஒப்புதல் வழங்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் மாவட்டச் செயலாளரினால் ஒப்புதலளித்தல் | **2022 மாசி மாதம் 28ஆம்** திகதிக்கு முன்னர் | மாவட்டச் செயலாளர், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 04 | செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களிற்கு மாதாந்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | மாதாந்த முன்னேற்ற அறிக்கை<br><br>கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் | பணிப்பாளர் நாயகம் - கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம். மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2022

மாவட்டம் :-

கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் :-

| | | | நிர்மாணக் கருத்திட்டத்தின் பெறுமதியில் 50% (ஆகக்குறைந்தது ரூபா 7.5 மில்லியன் ) | | | கொள்வனவு மற்றும் பயிற்சி 50% (ஆகக் கூடியது ரூ. 7.5 மில்லியன்) | 3 + 4 (ஆகக் கூடியது ரூபா.15.0 மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 | |
| தொ.இ | பிரதேச செயலாளர் பிரிவு | கருத்திட்டத்தின் பெயர் | ரூ. 200,000 இற்கு குறைவு (ஆகக் கூடியது ரூ. 3,000,000.00) | ரூபா 200,000.00 இற்கு அதிகமான | நிர்மாணங்களின் மொத்தப் பெறுமதி (1 + 2) | சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட வசதிகளை வழங்குதல் (கொள்வனவு) | |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |
| 6 | | | | | | | |
| 7 | | | | | | | |
| 8 | | | | | | | |
| 9 | | | | | | | |
| 10 | | | | | | | |
| 11 | | | | | | | |
| 12 | | | | | | | |
| 13 | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |
| | | | ஆகக் கூடியது, ரூபா 3,000,000.00 | | ஆகக் குறைந்தது, ரூபா 7,500,000.00 | ஆகக் கூடியது, ரூபா 7,500,000.00 | ஆகக் கூடியது, ரூபா 15,000,000.00 |

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2022

காலாண்டு நிதி மற்றும் பௌதீக இலக்குகள்

மாவட்டம் :…..........................................

| பிரதான செயற்பாடுகள் | ஒப்புதல் வழங்கப்பட்ட கருத்திட்ட எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. (மில்லியன்) | நிதி இலக்கு 2022 (மில்லியன்) | | | | 2022 இற்கான பௌதீக இலக்கு % | | | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | |
| பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | | | | | | | | | | | |

உறுதிப்படுத்தல் (Verified by) சான்றுபடுத்தல் (Certified by)

தயாரித்தது (Prepared by):……………… …………………………… …………………………… ………………………………………

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் பிரதான கணக்காளர் (மாவட்டச் செயலகம்) மாவட்டச் செயலாளர்

திகதி -

முத்திரை முத்திரை முத்திரை

இணைப்பு 06

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2022**

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்குமான நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படுகின்ற முறை

மாவட்டம் -

| | | | நிர்மாணக் கருத்திட்டத்தின் பெறுமதியில் 50% (ஆகக் குறைந்தது ரூ. 7.5 மில்லியன்) | | | கொள்வனவு மற்றும் பயிற்சி 50% (ஆகக் கூடியது ரூ. 7.5 மில்லியன்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 | |
| இல. | கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் | மாவட்டம் / தேசியப் பட்டியல் | ரூ. 200,000 இற்குக் குறைவானது (ஆகக் கூடியது ரூ. 3,000,000.00 வரை) | ரூ. 200,000 இலும் அதிகம் | நிர்மாணங்களின் மொத்தம் (1 + 2) | சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட வசதிகளை வழங்குதல் (கொள்வனவு) | மொத்தம் 3+4 (ஆகக் கூடியது ரூ. மில்லியன் 15.0) |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம் | | | - | - | - | - | - |

உறுதிப்படுத்தல்

சான்றுபடுத்தல்

தயாரித்தது : ................................

திகதி : ..................................

.................................
மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்
மாவட்டச் செயலகம்
முத்திரை

.........................
மாவட்டச் செயலாளர்

முத்திரை